முச்சந்தி முரளி




"கீரைக்கடைக்கு எதிர்க்கடை மாதிரி எல்லாரும் சொல்றதை பார்த்தால் நம்பிறமாதிரி இல்லையே"


Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 278

வெள்ளிக்கிழமை
30 ஓகஸ்ட் 2024

ஆவணி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## பயனாளிகளுக்கு மாதாந்தம் ரூ.20,000

## புதிய அரசமைப்பு விரைவில் உருவாகும்

## ஆறு மாதங்களுக்குள் மாகாணத் தேர்தல்

# மீளப்பெறப்படாத வகையில் மாகாணத்துக்கு அதிகாரம்!

ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தின் தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு



**கொழும்பு, ஓகஸ்ட் 30**

**புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை, 13 ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன், அரசமைப்பின் பிரகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக மீளப்பெறுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது - என்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**


15


## காணாமற்போனோருக்கு நவாஸ் அறிக்கை

## மாவட்டங்கள்தோறும் அபிவிருத்திச்சபை

## ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்பு

# மாகாணசபை அதிகாரம் புதிய நாடாளுமன்றிடம்

ஜனாதிபதி ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனம்



கொழும்பு, ஓக. 30

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் முடிவெடுப்பதற்குரிய பொறுப்பு புதிய நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும். அதேபோல காணிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேசிய காணி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் - என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகக் கள


15


## யாழில் இன்று சஜித்

யாழ்ப்பாணம், ஓக. 30

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித், தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று வருகை தரவுள்ளார்.


15


## போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்

ஜனாதிபதி வேட்பாளர் போபகே தெரிவிப்பு!



யாழ்ப்பாணம், ஓக. 30

போர்க் குற்றங்களுக்கு நீதி என்பது குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் தான்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது மட்டும் பாதிக்கப்பட்டோருக்கு நீதியாக அமையாது என்று 'அரகலய' போராட்டக்காரர்களால் ஜனாதிபதி


04


## கொடிகாமத்தில் சுற்றிவளைப்பு; 25 டிப்பர்கள் மடக்கிப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் நடத்தப்பட்டவிசேடசுற்றிவளைப்பு நடவடிக்கையில் 25 டிப்பர்கள் பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளன. அனுமதிப் பத்திரங்களின்றி


04


தமிழரசுக் கட்சியின்

# திருமலை மாவட்டக்கிளை பொதுவேட்பாளருக்கு ஆதரவு

நேற்று அதிரடித் தீர்மானம்

திருகோணமலை, ஓக. 30

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள பா.அரியநேந்திரனுக்கு ஆதரவு வழங்குவது என தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் குழு ஏகமனதாகத் தீர்மானத்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை மு.ப. 10


13


## இறக்குமதியா? தன்னிறைவா?

மக்களே சிந்தித்து வாக்கிடுக அநுரகுமார அறைகூவல்



திருகோணமலை, ஓக. 30

வெங்காயம், மிளகாய் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து சாப்பிட வேண்டுமென்றால், ரணிலின் அரசாங்கத்தை அமைத்துக்கொள்ளுங்கள். ஆனால்,


15


கூரிய ஆயுதத்தால் தாக்கி

## படுகாயமடைந்த இளைஞர் சிகிச்சையின்போது இறப்பு

வவுனியாவில் பயங்கரம்

வவுனியா, ஓக. 30

வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த இளைஞர், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். மைந்தன் இருதயராஜா (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.


04


## காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 30

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்பாகவும், ஸ்ரீலங்கா அரச படைகளால் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி வடக்கு - கிழக்கில் இன்று பரவலாகப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான இன்றைய நாளை முன்னிட்டே இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்தேவி மீள வரும்

## நாமல் உறுதி

கொழும்பு, ஓக.30
தற்போதைய நிர்வாகத்தின் கீழ் செயற்றிறன் இன்மை காரணமாக பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ள யாழ்தேவி ரயில் சேவைகள் எனது ஆட்சியில் மீள ஆரம்பிக்கப்படும் என்று பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச உறுதியளித்துள்ளார்.

30 வருடகால யுத்தத்தை முடித்துக்கொண்டு எமது அரசாங்கம் வடமாகாணத்துக்கான யாழ்தேவி ரயில் பாதைகளை வெற்றிகரமாக நிறுவியது. எனினும் தற்போதைய நிர்வாகத்தின் கீழ் செயற்றிறன் இன்மை காரணமாக பல மாதங்களாக யாழ்தேவி ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கான ரயில் சேவைகளை மீண்டும் தொடங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு எமது அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. மாத்தறை முதல் கதிர்காமம் வரையிலான 114 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதையை தாமதமின்றி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார். (ச-இ)



# தமிழ் மக்களின் வாக்கு ஒற்றுமையைப் பிரதிபலிக்கும்

## பொதுவேட்பாளர் அரியநேந்திரன் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஓக. 30**
**நான் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப்போவதில்லை. ஆனால் தமிழ் மக்கள் ஓரணியாக இருக்கின்றார்கள் என்ற செய்தியைச் சொல்வதற்கு நீங்கள் எனக்கு வாக்களியுங்கள் -இவ்வாறு தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.**

பூநகரி, முழங்காவிலில் நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
சிங்களத் தலைவர்களால் காலங்காலமாகத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக நான் போட்டியிட்டாலும் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரப் போவதில்லை.
ஆனால் எனக்கு அளிக்கப்படும் வாக்குகள் சிங்களத் தரப்புக்கும், சர்வதேசத்துக்கும் பலமான செய்தியைச் சொல்லும். தமிழ் மக்கள் ஓரணியில் நிற்கின்றார்கள் என்பதே அந்தச் செய்தி. அடுத்தது தமிழர்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்பதை வெளியுலகத்துக்குக் கொண்டு செல்ல முடியும்-என்றார். (ஒ-13)




# தலதாவுக்குப் பதில் பரணவிதான

கொழும்பு, ஓக.30
தற்போது வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கருணாரத்ன பரணவிதானவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரல தமது பதவியை இராஜினாமாச் செய்ததன் மூலம் வெற்றிடமாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

# ரணில் போட்டியிடலாம்

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு


கொழும்பு, ஓக.30
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது .
ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அத்துடன் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நீதியரசர்களை நியமிக்காமை தொடர்பில் சட்டத்தரணியால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. (ச-இ)

## ஜூலைக் கலவரம்

# பொறுப்புக்கூறலில் ரணிலுக்கு பங்குண்டு

கிளிநொச்சி, ஓக.30
1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் இடம்பெற்றபோது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சராகப் பதவிவகித்துள்ளார். அந்த வகையில் ஜூலைக் கலவரத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டி அவரால் நீதி நிலை நாட்டப்படவில்லை.
-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விமல் ரத்னாயக்கா கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். (ச-25 - 113)

# வேட்பாளர்கள் விவரம் வர்த்தமானி வெளியீடு



கொழும்பு, ஓக.30
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், குறித்தொதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அரசியல் கட்சி அல்லது வேறு கட்சியின் பெயர் உள்ளிட்ட விடயங்களுடனான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.
குறித்த அதிவிசேட வர்த்தமானி தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)



# பதவியைத் துறந்து சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 30
நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்துள்ளார்.
அத்துடன், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைமைப்பதவியையும் அவர் துறந்துள்ளார்.
தங்காலையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றின்போதே ஜனாதிபதி வேட்பாளர் சஜித்துக்கான ஆதரவை அவர் வெளிப்படுத்தினார். (ஒ-44)



# தேசிய மக்கள் சக்தியின் உபஅலுவலகம் தீக்கிரை

கொழும்பு, ஓக.30
மீரிகம பொகலகம பிரதேசத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரை அலுவலகம் இன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பல்லேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த கட்டடமும் சிறிய அளவில் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்துள்ளனர். (ச)

# தேர்தல் கருத்துக்கணிப்பு: தடுப்பதற்கு நடவடிக்கை

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து சமூக வலைத்தளங்கள் ஊடாக நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளை நிறுத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. இந்தக் கருத்துக்கணிப்பு காரணமாக சில வேட்பாளர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது. சமூக ஊடகங்கள் ஊடாக நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளை நிறுத்துவது இலகுவானதல்ல. ஆகையால் இது தொடர்பில் விரைவான வழிமுறை தேவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவு.வில் கடவுச்சீட்டுப் பெற அல்லலுறுகின்ற மக்கள்!

*பொலிஸார் குவிப்பு; நிலைமை கட்டுப்பாட்டுக்குள்*

வவுனியா, ஓக.30

வவுனியா பிராந்திய குடிவரவு, குடிய கல்வுத் திணைக்களத்துக்கு முன்பாக கடந்த 5 நாட்களாக வரிசையில் நின்றும் தமக்கும் இதுவரை கடவுச்சீட்டு கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்து மக்கள் கொதித்தெழுந்துள்ளனர்.

இதனால் திணைக்களத்துக்கு முன்பாக குழப்ப நிலைமை ஏற்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொலிஸார்வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

வவுனியா பிராந்திய குடிவரவு, குடிய கல்வுத் திணைக்களத்தினால் சாதாரண சேவையின் கீழ் 25 நபர்களுக்கும், ஒருநாள் சேவையின் கீழ் 25 நபர்களுக்கும், ஏற்கனவே சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட காலம் முடிவடைந்தும் கடவுச்சீட்டினைப் பெறாத 10 நபர்கள் என ஒரு நாளைக்கு 60 பேருக்கு கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. மேலும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினைப் பெறுபவர்களில் முக்கியமானதேவையுடையவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையிலும் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படுகின்றது.


இந்த நிலையிலேயே வவுனியா பிராந்திய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு முன்பாக கடந்த ஐந்து நாள்களாக வரிசையில் நின்றும் தமக்கும் இதுவரை கடவுச்சீட்டு கிடைக்காது விரக்தியடைந்தோர் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர். (ச-18)

ருஹுணு மக்கள் கூட்டணி

(இலங்கை மக்களுக்கான முன்னணி)

ஒரே நாடு மக்கள்

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் ஊடாக அனைத்து மக்களும் சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் சம வாய்ப்புகளுடன் ஒன்றிணைந்து வாழும் ஜனநாயக மற்றும் சுதந்திர சமூகத்தை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்.



අජන්ත ද සොයිසා

அஜந்தா டி சொய்சா

Ajantha De Zoysa

97, Venpuravi, 3rd unit, Allaipiddy, Jaffna | 76, 5th Lane, Nawala | 071 195 0777

071 195 0777 / 0719999757 | Ruhunu Janatha Alliance | janatharuhunu@gmail.com



## தமிழ்ப் பொதுவேட்பாளரின் அலுவலகம் திருமலையில்

திருகோணமலை, ஓக.30

திருகோணமலையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பரப்புரைப் பணிகளை ஒருங்கிணைக்கும் அலுவலகம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் தமிழ்த்தேசிய பொதுக்கட்டமைப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பா.அரியநேந்திரனுக்கு ஆதரவு திரட்டும் வகையில் திருகோணமலை மாவட்டத்தில் பரப்புரைநடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ரி-100)

தேர்தல் கண்காணிப்பு

## முதலாவது குழு வருகை

கொழும்பு, ஓக.30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களுடனான முதலாவது குழு இலங்கை வந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களுடனான மற்றொரு குழுவும் இலங்கை வரவுள்ளது. அதே நேரம், பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர் குழுவொன்றும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் பங்கேற்பதற்காக இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மன்னார் சட்டத்தரணிகள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு

மன்னார், ஓக.30

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் ஒட்டப்பட்ட அனாமதேய சுவரொட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்யக் கோரியும் மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். இதன் காரணமாக நேற்றையதினம் அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளும் பிறிதொரு தினத்துக்குத் தவணை இடப்பட்டுள்ளன.

மேலும் மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினால் இன்றைய தினமும் அடையாள பணிப்பகிஷ்ககரிப்பு மேற்கொள்ள உள்ளதோடு, ஊடக சந்திப்பும் மேற்கொள்ளப்படவுள்ளதாக மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ தெரிவித்துள்ளார். (ச-25)



## ஜனாஸாக்கள் தகனம்; பொறுப்புக்கூறப்படும்

*ஜனாதிபதி ரணில் உறுதிமொழி*

கொழும்பு, ஓக.30

கொரோனாத் தொற்றின்போது உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களைத் தகனம் செய்ய பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறலை ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தலைமையகத்துக்குச் சென்ற ஜனாதிபதி, அதன் தலைவர் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மௌலவிமார்களுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணையை கோருவதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார். (ச-இ)



## மாவீரர் துயிலுமில்லத்தில் பொதுவேட்பாளர் அஞ்சலி

வவுனியா, ஓக.30

'நமக்காக நாம்' பிரசாரப் பயணத்தின் ஐந்தாவது நாளான நேற்றுமுன்தினம் புதன்கிழமை முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் சுடரேற்றி அஞ்சலித்தார்.

அதேவேளை தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு நேற்று சென்று அங்கும் அஞ்சலி செலுத்தினார். (ச-100,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.30

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி)




## 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்.பல்கலைக்கழகத்தின் வடமாகாண நீர்ப் பாதுகாப்புச் செயற்றிட்டம், இளைய நீர்த்துறையாளர் வட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், பல்வேறு நீர் சார்ந்த அரச திணைக்களங்களும், அமைப்புகளும் இணைந்து நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டுப் பொதுமக்களுக்கு நீர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப்படை வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

நீர்ப்பாதுகாப்புக்காக எடுக்கப்படவேண்டிய பல்வேறு தொழில்நுட்ப, சமூக முன்னெடுப்புகளையும் தொகுத்து இந்தக் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் நீர்ப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட் டுள்ளது.

கண்காட்சியின் ஆரம்பநாள் நிகழ்வில் வடமாகாணப் பிரதம செயலாளர் எஸ்.இளங்கோவன், யாழ். பல்கலைக்கழக வடமாகாண நீர்ப் பாதுகாப்புச் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் எஸ்.சிறீஸ்கந்தராஜா, யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் சுதாகரன், யாழ்.மாநகரசபையின் பிரதம பொறியியலாளர் சுரேஷ்குமார், நீர்வளச்சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை வரை 10 நாள்களுக்கு குறித்த கண்காட்சி காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரை இடம்பெறவுள்ளது. (ச-25-66,20)

## யோகா கற்கை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஓக.30

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கற்கைநெறி சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணிவரை நடைபெறும்.

பயிலவிரும்புவோர் 14ஆம் திகதி சனிக்கிழமை நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும், மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திட்டமிட்டுச் செயற்படவேண்டிய நாள். எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பணிபுரியும் இடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். வரவின் வழியே சங்கடம் தோன்றும். முயற்சி வெற்றியாகும். நினைத்த காரியம் நடக்கும்.

**இடபம்:** போராடி வெற்றிபெற வேண்டிய நாள். வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகளை சரி செய்வீர். உழைப்பு அதிகரிக்கும். நினைப்பது நிறைவேறும் நாள். கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பிரச்சினை சரியாகும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். குழப்பம் விலகும். மனத்தெளிவு உண்டாகும். உங்கள் விருப்பம் நிறைவேறும். விழிப்புடன் செயற்படவேண்டிய நாள். செயல்களில் சிக்கல் தோன்றும். உழைப்பு அதிகரிக்கும்.

**கடகம்:** முயற்சி வெற்றியாகும் நாள். செலவு அதிகரிக்கும். அலைச்சல் உண்டாகும். நினைத்ததை சாதிப்பீர். எதிர்ப்புத் தோன்றும் நாள். குடும்பத்தில் நெருக்கடி அதிகரிக்கும். யோசித்துச் செயற்படுவது நல்லது. திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய நாள்.

**சிம்மம்:** முயற்சி வெற்றியாகும் நாள். செலவு அதிகரிக்கும். அலைச்சல் உண்டாகும். இன்று நினைத்ததை சாதிப்பீர். எதிர்ப்புத் தோன்றும் நாள். குடும்பத்தில் நெருக்கடி அதிகரிக்கும். யோசித்து செயற்படுவது நல்லது. திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி:** தெய்வ வழிபாட்டால் திருப்தி அடையும் நாள். செயல்களில் கவனம் அவசியம். பணிபுரியும் இடத்தில் யாரையும் பகைக்க வேண்டாம். வருமானத்தில் உண்டான நெருக்கடி நீங்கும்.

**துலாம்:** நன்மையான நாள். உங்கள் செயல்களில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். ஒரு சிலருக்கு வேலைக்குரிய தகவல் வரும். நிதானமாக செயற்பட வேண்டிய நாள். செயல்களில் எதிர்பாராத தடைகளையும் தாமதங்களையும் சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் திறமை வெளிப்படும் நாள். மனக்குழப்பம் விலகும். இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். இனம் புரியாத குழப்பமும், மோதலும் உண்டாகும்.

**தனுசு:** அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். கவனமாக செயற்படுவதால் நீங்கள் எதிர்பார்த்த வரவு வரும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும் நாள். அலுவலகத்திலுள்ள செல்வாக்கு உயரும். நீங்கள் எடுக்கும் முயற்சி முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** போராட்டமான நாள். இன்று முடிவிற்கு வரவேண்டிய வேலையில் இழுபறி உண்டாகும். அதிர்ஷ்டமான நாள். தீராமல் இருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். எதிரிகள் விலகிச் செல்வர். வருவாய் உயரும்.

**கும்பம்:** வளம்காணும் நாள். உங்கள் செயல்களில் இருந்த தடை விலகும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். அமைதி காக்க வேண்டிய நாள் உங்கள் எதிர்பார்ப்பு இன்று இழுபறியாகும். நெருக்கடி அதிகரிக்கும்.

**மீனம்:** சங்கடம் விலகும் நாள். நீங்கள் மேற்கொள்ளும் வேலைகளில் லாபம் உண்டாகும். பண நெருக்கடி விலகும். உங்கள் செல்வாக்கு உயரும். கவனமுடன் செயற்பட வேண்டிய நாள். மனக்குழப்பமும் பதற்றமும் உண்டாகும்.

### போர்க்...

வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள நுவான் போபகே தெரிவித்துள்ளார்.

உதயன் பணிமனைக்கு நேற்று வருகைதந்த அவர், செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு நீதி என்பது வெறுமனே குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது அல்ல. பாதிக்கப்பட்ட மக்கள் குற்றவாளிகளைக் கண்டறிவதையும், என்ன நடந்தது? என்பதை அறிவதற்காக மட்டும்தான் ஆர்வத்துடன் உள்ளனர் என்று கொள்வது தவறு. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியென்பது குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும்தான்.

உதாரணமாக, மிருசுவில் படுகொலை மரணதண்டனைக் கைதிக்குப் பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைத்தனர். பின்னர் அவர் கோத்தாபயவால் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார். இதில் எங்கு நீதி நிலைநாட்டப்பட்டது? பாதிக்கப்பட்டோருக்கான நீதி என்பது குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும்தான். இதை நாங்கள் எங்களின் நிலைப்பாடாக ஏற்கனவே அறிவித்துவிட்டோம்" - என்றார். (அ-ம)

### படுகாயமடைந்த...

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது நண்பர்களுடன் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட இளைஞர் மீது அங்கு வந்த குழுவினர் கொலைவெறித் தாக்குதலை நடத்தியிருந்தது. தாக்குதலில் காயமடைந்த இளைஞர் வவுனியா மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் மீண்டும் வவுனியா மாவட்ட மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே, அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் - சில்லாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவித்துள்ள பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18)

### கொடிகாமத்தில்...

மணல் கொண்டுசென்ற 24 டிப்பர்களும், அனுமதியின்றி மரக்குற்றிகளைக் கொண்டுசென்ற ஒரு டிப்பருமே இவ்வாறு பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் பணிப்புரைக்கமையவே இந்தச் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், டிப்பர் சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### காணாமலாக்கப்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இன்று நண்பகல் 12 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் இலங்கைக்குத் திடீர்ப் பயணம்!

கொழும்பு, ஓக. 30

இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் நேற்று வியாழக்கிழமை இலங்கைக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, இலங்கையின் பிரதானிகள் பலரை அஜித் டோவல் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொடவையும் டோவல் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் உத்தேச திட்டங்கள் அடங்கிய அறிக்கையை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வழங்கியுள்ளார்.

வீதி, ரயில் மார்க்கம், மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகிய பிரிவுகளின் கீழ் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையே நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பின் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகள் வலுப்பெற்று இலங்கையின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 வீதத்தில் இருந்து 6 வீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பான பரிசீலனைகள் தற்போது தீவிரமாக இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை- இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இன்று மாலை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

# நல்லூரானுக்கு இன்று ஒருமுகத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 30

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தண்டாயுதபாணி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.45 மணியளவிலும், ஒருமுகத் திருவிழா இன்று மாலை 4.45 மணியளவிலும் இடம்பெறவுள்ளது. (ம-66)

# யாழ். இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 30


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசுத் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இருதயச் சிகிச்சை நிபுணரும், பழைய மாணவருமான பூ.லக்ஷ்மன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-66)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் 21ஆம் நாளான வேல்விமான உற்சவம் (துங்கரத உற்சவம்) நேற்று வியாழக்கிழமை மாலை சிறப்பாக இடம்பெற்றது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைலாய வாகனத்தில் எழுந்தருளிய நல்லூரான்!

யாழ்ப்பாணம், ஓக.30
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவின் 20ஆம் நாள் திரு விழாவான கைலாய வாகன உற்சவமான நேற்றுமுன்தி னம் புதன்கிழமை மாலை 6மணிக்கு கைலாய வாகனத் தில் நல்லூரான் எழுந்தருளினார். (ரி-100-66)

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.30
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை யில் யாழ்.நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்ச வத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறு முகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளன. நவாலி கதிர் காம முருகன் பஜனைக் குழுவி னரின் பஜனை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள் ளது. (ரி)

# பொலிஸ் கண்காணிப்பு யாழ். நகரில் தீவிரம்

யாழ்ப்பாணம், ஓக. 30
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் பண்ணைக் கடற்கரைப் பகுதிகளைச் சூழ வுள்ள இடங்களில் பொலிஸாரின் கண்காணிப்புகள் நேற்று வியாழக்கிழமை முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
சட்டவிரோதச் செயற்பாடுகள், சமூகச் சீர்கேடான விடயங்கள் உள்ளிட்ட விரும்பத்தகாத செயற்பாடுகள் அதிகரித்துள்ள தாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயல கத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட் டிக்காட்டப்பட்டது. இதனையடுத்துக் குறித்த பகுதிகளில் திடீர் சுற்றுக் காவல் பணிகளை மேற்கொள்ளுமாறும், இவ்வா றான சட்டவிரோதச் செயற்பாடுகள் நடைபெறும் இதர பகுதி களையும் கண்டறிந்து சட்டவிரோதச் செயற்பாடுகளை முழு மையாகக் கட்டுப்படுத்துவதற்குத் துரித நடவடிக்கை எடுக் குமாறும் பொலிஸாருக்கு வடக்கு ஆளுநர் உத்தரவிட்டி ருந்தார். இதன் எதிரொலியாகவே குறித்த பகுதிகளில் பொலிஸாரின் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன. (ஒ-66)



## கஜவல்லி மஹாவல்லி உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.30
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திரு விழாவின் 21 ஆம் நாள் கஜவல்லி மஹாவல்லி உற்சவம் நேற்று வியாழக் கிழமை காலை 6.45 மணிக்கு சிறப்பாக நடை பெற்றது. (ரி-66)

## மாயமான மீனவர்கள்; ஒருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 30
கச்சதீவு அருகே கடலில் படகு கவிழ்ந்ததில் மாயமான 2 மீனவர்களில் ஒருவர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த 26ஆம் திகதி கச்சதீவு அருகே 4 மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் காற்றுக் காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டதுடன் இரண்டு மீனவர்கள் காணாமற் போயிருந்தனர். அதேவேளை மீட்கப் பட்ட இரண்டு மீனவர்களும் யாழ்ப்பாணம் இந்தியத்துணைத் தூதரக அதிகாரிகளால் பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று நண்பகல் சென்னைக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள னர். (ச-26)

# நல்லூர்த் திருவிழாவின் 22ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.30
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வரு டாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
22 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம் பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெ ரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநா தன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, நல்லூர் வீரமாகாளி அம்மன் தேவஸ் தான ஆதீனகர்த்தாவும் முதன்மைப் பிரதம குரு கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ்குருக்கள் தலை மையில் நடைபெறவுள்ளது.
கிழவன் காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ள னர். விஷேட நிகழ்வாக செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் தலைமையில் "ஆன்மீக நாட்டத்தை பெரிதும் வெளிப்படுத்துவோர் இளையவர்களா? முதியோர்களா?" எனும் தலைப்பிலே சிறப்புப்பட்டி மன்றம் இடம்பெறவுள்ளது. (ரி)



# நல்லூரான் சிறப்பம்சம்

அஞ்சுகத்தாரிருவருடன் அசைந்தாடி வந்து
அலங்காரம், அற்புதமானந்தம் தந்து
விஞ்சு புகழ் நல்லூரின் விழுமியமாயென்றும்
வேலதனைக் கரமேந்தி வீரனென நின்று
தஞ்சமென்று கெஞ்சி நிற்கும் அடியார்க்கு அருள
தண்ணருளான் பவனி வரும்
திரு நல்லை வீதி!

■ தேவி. கணேஸ்

## தங்கவேலாலென்ன பயன்?

இன்பத் தமிழ்த் தலைவா
எங்கள் இறை குமரா
நல்லை நகர் முருகா
தொல்லை களை கந்தா
தங்கவேலால் எம்பிடர்
தகர்த்திருலாய் என்றிருந்தோம்
தவழும் பிள்ளையாய் இன்றும்
தங்கத் தாமரையில் தாவுகின்றாய்

முறையிட்டு உன் முன்னே கதறி அழுவோரை
கணக்கிட்டுப் பாரையா நிரை நீளும்
காணாமற் போன எம் உறவுகளை நீயும்
கணக்கெழுதாத மாயமென்ன?
ஆறு திருமுருகா எமக்கேன்
ஆறாத துயர் தந்தாய்
தீராத எம் சோகங்களை நீ
தீர்த்திட நினையாத சாபமென்ன?

சமயச் சீண்டல்கள் இன மோதல்கள்
சாதிப் பிரிப்புகள் நிலப் பறிப்புகள்
விலையேற்றங்கள் விசித்திரச் சாவுகள்
வன்கொடுமைகள் வரலாற்றுத் திரிபுகள்
பக்திப் பரவசமாய் குடியிருந்த மண்ணில் இறை
சக்தி மருவி வாழ்கிறதே.....
ஐயகோ...! புத்தியிழந்து எம் புதல்வர்கள்
போதையில் கிடக்கிறாரே முருகையா உன்
சக்தி வேலால் எம்மினம் காக்காமல் திருத்தேரில் நீ
சுற்றி வருவதில் பயனேது சொல்லையா?

■ சாந்தையூர் வினிஸ்

## அருள் நேசா

நெஞ்ச மேனும் குறிஞ்சி நில மேடு
நித்தமும் நீ குதித்து விளையாடு
குஞ்சரி வள்ளி மணவாளா
கோலமயில் மீதமரும் சீலா

வேலெடுத்து வீசி முன்னாள்
விண்ணோர் குறை தீர்த்த குமரா
பால் வடியும் பால முருகேசா நாம்
படும் பாட்டைப் பார் நல்லை வாசா

நல்லவர்கள் வாழும் எழில் நல்லூர்
நம்மவர்கள் ஆண்ட பழம் பூமி
வல்லவனே எங்கள் வடிவேலா
வந்து வினை தீரும் அருள் நேசா

■ கரவைக்கூத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## போராட்டம் எனும் காலக்கடமை!

இன்று சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம். இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னரும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியும், அவர்களுக்கு நீதி தேடியும் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் இன்றையதினம் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி தமிழர் தாயகம் வீதிக்கு இறங்குவது இதுவொன்றும் முதல்முறையல்ல. ஆனால், இந்த வருடத்தில் இடம்பெறும் காணாமலாக்கப்பட்டோர்தின போராட்டங்கள் சந்தர்ப்பவாதங்களாலும், காலப்பின்னணியாலும் மிகக் கனதியானவை என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை.

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையால் இலங்கைக்கு வழங்கப்பட்ட இரு வருட அவகாசம் இந்த ஓகஸ்ட்டுடன் முற்றுப்பெறுகின்றது. ஆதலால், செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தின் பின்னர் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், அவகாசக் காலத்தில் இலங்கை அரசாங்கம் காட்டிய முன்னேற்றங்கள் மற்றும் அடைவுமட்டங்கள் தொடர்பில் சர்வதேசம் நிச்சயம் பரிசீலிக்கும். இவ்வாறானதொரு பின்னணியில், எமது பிரச்சினைகள் இன்றளவும் தீர்க்கப்படாமலேயே உள்ளன என்பதை பட்டவர்த்தனப்படுத்துவதற்கு இன்றைய நாளில் இடம்பெறும் காணாமலாக்கப்பட்டோரின் போராட்டங்களை நாம் முடிந்தளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன், ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான பரபரப்புகள் தற்போது தீவிரம் பெற்றுள்ள நிலையில் 'எமது பிரச்சினை அதுவல்ல' என்பதை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் இன்றைய போராட்டங்கள் எம்முன் விரிகின்றன.

ஐம்பதல்ல, நூறல்ல சுமார் மூவாயிரம் நாள்களாக தமிழர் தாயகம் காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டங்களை எத்தனையோ தடங்கல்கள் 'அச்சுறுத்தல்கள்' இடையூறுகளைத் தாண்டி முன்னெடுத்த போதிலும், நீதியென்பது இன்னும் எட்டாக்கனி நிலைதான். போர் முடிவுக்கு வந்து 15 வருடங்களைக் கடந்துவிட்ட போதிலும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு இழப்பீடு, இறப்புச் சான்றிதழ்கள் என்பனதான் சிறீலங்கா அரசாங்கம் முன்வைத்த உச்சபட்சத்தீர்வுகளாக உள்ளன. இவற்றைத் தவிர வேறெந்த நகர்வையும் சிறீலங்கா அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் கிஞ்சித்தும் முன்நகர்த்தவில்லை. அதற்குரிய ஆத்மார்த்தமான விருப்பம்கூட கொழும்புக்கு இல்லை. காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் மூவாயிரம் நாள்களாக விடுக்கப்பட்ட எந்தக் கோரிக்கைகளும் இலங்கையின் நீதிக்கட்டமைப்பை அசைக்கவில்லை. அரசின் இரும்பு இதயத்தை இளகச்செய்யவில்லை. ஆதலால் தற்போது எம்முன்னுள்ள ஒரே தெரிவு 'போராட்டத்தைத் தீவிரப்படுத்தல்'தான். இப்படியொரு நிலையில்தான் இன்றைய விடியலை எதிர்கொள்கின்றது தமிழர் தாயகம்.

போரில் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கான நீதிக் கட்டமைப்பு, நிலைமாறுகால நீதி, பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தனது பிடியை இறுக்க வேண்டுமாயின் இதுபோன்ற வாய்ப்புகளை நாம் மீதமில்லாமல் பயன்படுத்தவேண்டும். காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி வழங்கப்பட்டுவிட்டதுபோல் ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஓ.எம்.பி. அலுவலகத்தை மையப்படுத்தி பல கபடத்தனங்களை கொழும்பு நகர்த்திவரும் நிலையில் இன்றைய நாளின் முக்கியத்துவத்தை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். காலக்கடமைகளை நிறைவேற்றவிடாத பட்சத்தில், அதை 'வரலாற்றுத் தவறு' என்பர். அவ்வளவு இலகுவில் திருத்தியெழுத இயலாத தவறுகள்தான் வரலாற்றுத் தவறுகளாகின்றன.



## 57ஆவது ஐ.நா. கூட்டத்தொடர் இம்முறை இலங்கை இறுகும்!

### அறிக்கையிடவுள்ள ஐ.நா.

கொழும்பு, ஓக.30

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடரின் ஆரம்ப தினமான செப்ரெம்பர் 9 ஆம் திகதியன்று இலங்கை விவகாரம் பேசுபொருளாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.**

அன்றைய தினம் இரண்டாவது விடயமாக இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அது தொடர்பான கலந்துரையாடல் நடைபெறும். இதன்போது பொறுப்புக்கூறல் பற்றி வலியுறுத்தவுள்ளதுடன் விரிவான அறிக்கை ஒன்றையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை சமர்ப்பிக்கவுள்ளது. (ச-25, 6)

## சட்டக் கல்லூரிக்கென புதிய இணையத்தளம்

மன்னார், ஓக.30

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் இலங்கை சட்டக்கல்லூரி புதிய இணையத்தளம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளது. www.sllc.ac.lk என்ற இந்த இணையத்தளத்தினூடாக சட்டத்தரணிகளும், சட்டத்துறை மாணவர்களும் தமக்குத்தேவையான கல்விசார் தகவல்களையும், சட்டக்கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகளையும் தெரிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர் முகாமைத்துவம், கற்கை முகாமைத்துவம் பற்றிய விடயங்களும் மேற்படி இணையத்தளத்தில் வெளியிடப்படும். (ச-6)

## புகலிடக்கோரிக்கையாளர் அவுஸ்திரேலியாவில் சாவு

கொழும்பு, ஓக.30

அவுஸ்திரேலியாவில் இலங்கைத்தமிழ் இளைஞன் ஒருவன் உயிர்மாய்த்து உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

புத்தளத்தைச் சேர்ந்த 23 வயதான மனோ யோகலிங்கம் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். புகலிடம் கோரி நீண்டகாலமாக விசாவுக்கு காத்திருந்த நிலையில், மன உளைச்சல் காரணமாக அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## 9,535 காசநோயாளர்கள் கடந்த ஆண்டில் பதிவு!

கொழும்பு, ஓக.30

நாட்டில் கடந்த 2023ஆம் ஆண்டில் 9,535 காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய காசநோய் மற்றும் இருதய நோய்கள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட மருத்துவ நிபுணர் பிரமிதா சாந்திலதா தெரிவித்துள்ளார். அதிகளவான காச நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளனர். சளியுடன் கூடிய இருமல், நீண்ட நாள் காய்ச்சல், பசியின்மை, உடல் எடை குறைதல், இரத்தம் கலந்த சளி, மார்புவலி என்பன காசநோய்க்குரிய அறிகுறிகளாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## 55 ஆயிரம் பொலிஸார் வாக்களிப்புக் கடமையில்

கொழும்பு, ஓக. 30

இலங்கையிலுள்ள 607 பொலிஸ் நிலையங்களில் 602 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். 45 தேர்தல் கண்காணிப்பு நிலையங்களை நாங்கள் உருவாக்கவுள்ளோம்.

55 ஆயிரம் பொலிஸார் வாக்குச்சாவடிகளில் கடமையில் ஈடுபடுவர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-6)

### நாளை

31.08.2024

சனிக்கிழமை - ஆவணி - 15

சுபநேரம் : 03.05 - 04.35

ராகுகாலம் : 09.05 - 10.35

### நாளொரு நல்வார்த்தை

பூக்களாய் இருக்காதே உதிர்ந்து விடுவாய்.

செடிகளாய் இரு பூத்துக்கொண்டே இருப்பாய்.

-விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழரிடையே ஆதரவு அதிகரிப்பு

## நாம் எடுத்த நிலைப்பாட்டில் உறுதியுடன் பயணிக்கின்றோம் என்கிறார் செல்வம் எம்.பி.

**வவுனியா, ஓக. 30**

**தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பது என்று எமது கட்சி எடுத்த முடிவில் உறுதியாக இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆதரவு என்பது அதிகரித்துச் செல்கின்றது - இவ்வாறு ரெலோ இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

வவுனியாவில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து துண்டறிக்கை வழங்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக எதிராகக் கூறும் கருத்துகள் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்.

தென்னிலங்கைத் தலைவர்களுடன் பேச்சுக்கு ஒன்றாகச் செல்வது பற்றி பொதுக்கட்டமைப்பின் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அநுர போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்று கூறியிருக்கின்றார். இவர்கள்தான் வடக்கு கிழக்கைப் பிரித்தவர்கள். எங்கள் மக்கள் அநுரவை பற்றிச் சிந்திக்கவில்லை. எங்களது அடித்தளத்தை உடைத்து எறிந்தவர்கள் ஜே.வி.பி.யினர்.

அவர்கள் என்னதான் தேனும், பாலும் ஓடுமென்று கூறினாலும் கூட அவர்களுக்கு தமிழர் பிரதேசங்களில் வாக்களிப்பு குறைவாகத்தான் இருக்கும். பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டிருக்கின்ற நிலையில் ஜனாதிபதி தேர்தலில் எமது தமிழ்ச் சமூகம் ஒரு குடையின் கீழ் அணி திரண்டு இருக்கின்றது. இதனை செய்தியாக்கவேண்டும் என்பது தான் நமது சங்குச் சின்னத்தின் நோக்கமாக இருக்கின்றது - என்றார். (ஒ-18,110)



## கிளி. பூநகரி மக்களுடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

கிளிநொச்சி, ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச மக்களை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, பூநகரி பிரதேச மக்களின் உடனடித் தேவைப்பாடுகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், அதுசார்ந்த மக்களின் எதிர்பார்ப்புகள் என்பவை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேட்டறிந்துகொண்டார். (ச-45,26, 113)

## அதிகரித்துள்ள வெப்பம்! குழந்தைகள் அவதானம்

தற்போது அதிகரித்துள்ள வெப்பம் காரணமாக குழந்தைகளுக்கு தோல் நோய்கள் ஏற்படலாம் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். தேவையில்லாமல் குழந்தைகளை வெயில் படக்கூடிய இடங்களுக்குக் கொண்டு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் தினமும் இரு தடவைகள் குளிப்பாட்டுமாறும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தூய இயற்கை நீர், எலுமிச்சம்பழச்சாறு, வத்தகைப்பழம், இளநீர் என்பவற்றைப் பருகக் கொடுக்குமாறும் செயற்கை குளிர்பானங்களை வழங்கவேண்டாமெனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக வடமாகாணத்தில் பூநகரி, நெடுந்தீவு, தட்டுவன்கொட்டி, சுண்டிக்குளம் பகுதிகள் அதிக வெப்பமாக காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

## 650 கைபேசிகளுடன் சந்தேகநபர் கைது

புத்தளம், ஓக.30

கெக்கிராவையைச்சேர்ந்த ஒருவர் புத்தளத்தில் வைத்து 650 அலைபேசிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் வீதித்தடையில் சந்தேகநபர் பயணம் செய்த வாகனத்தை சோதனையிட்டபோதே சந்தேகநபரின் வாகனத்திலிருந்து 650 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-25, 6)

## வேலைவாய்ப்புடன் புலமைப்பரிசில்கள்

### ஆசிய அபிவிருத்தி வங்கி முதலீடு

கொழும்பு, ஓக.30

2025ஆம் ஆண்டு இடைநிலைக்கல்வியை முடித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. 50000 வேலைவாய்ப்புடன் கூடிய 60000 பயிற்சி நெறிகள் இந்தத் திட்டத்தினூடாக அறிமுகம் செய்யப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் திட்டத்துக்கென 100 மில்லியன் ரூபாவை முதலீடு செய்யவுள்ளது.

தொழிற்சந்தையில் காணப்படும் வேலைவாய்ப்புகளுக்கேற்ப மாணவர்களை தயார்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-6)

## போலி மது உற்பத்தி; இருவர் கைதாகினர்

கொழும்பு, ஓக.30

பியகம பிரதேசத்தில் சட்டவிரோதமாக வெளிநாட்டு மதுபானங்களை (போலி) உற்பத்தி செய்து வந்த இருவரை பியகம மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர். சிங்கப்பூர் பிரஜை ஒருவரே இந்த வெளிநாட்டு மதுபானங்களை (போலி) உற்பத்தி செய்யும் வடிசாலையை நடத்தி வந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. இரண்டு போத்தலில் அடைக்கும் இயந்திரங்கள் 54 போலி விஸ்கி போத்தல்கள் மற்றும் மதுபானத் தயாரிப்பு இயந்திரங்கள் என்பவற்றை பியகம மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதினம் தெரியுமோ?

ஜனாதிபதித் தேர்தல் முடிஞ்சாலும்கூட, ஆருக்கு சப்போர்ட் பண்ணுறது எண்டு வீட்டுக்கட்சிக்காரர் ஒரு முடிவுக்கு வரமாட்டினம் எண்டது அந்தக் கட்சியில உள்ள எல்லாருக்குமே நல்லாத் தெரிஞ்சு போட்டுது. அதாலதான் ஆளாளுக்கு தங்கடபாட்டில தங்கட ஆதரவு ஆருக்கு எண்டு அறிவிக்கத் தொடங்கிட்டினம். சிறீதரன் பொது வேட்பாளருக்கு ஆதரவு எண்டு அறிவிச்சமாதிரி இப்ப வீட்டுக் கட்சியின்ர திருகோணமலைக்கிளையும் தங்கட ஆதரவு தமிழ்ப்பொது வேட்பாளருக்குத்தான் எண்டு அறிவிச்சிருக்கினம். இப்பிடியே போனால் மற்ற மாவட்டக் கிளையளும் தலைமையைக் கேக்காமல் தாங்களாகவே ஒருமுடிவை அறிவிப்பினம் போலதான் கிடக்குது.

இப்பிடி கட்சியின்ர ஒவ்வொரு மாவட்டக் கிளையும் ஒவ்வொரு கோணத்தில இருக்க, அதைப்பற்றி எந்தக் கவலையுமில்லாமல் பொது வேட்பாளராப் போட்டியிடுற அரியத்தாருக்கும், அவருக்கு சப்போர்ட் பண்ணின சிறியருக்கும் எதிரா நடவடிக்கை எடுக்கிறதிலதான் வீட்டுக்கட்சியின்ர திறப்பை இப்போதைக்கு கையில வைச்சிருக்கிறவை கடும் பிஸியா இருக்கினமாம். அதால இப்ப அடிக்கடி ஒரு மத்தியகுழுக் கூட்டத்தைக் கூடுகினம்.

இப்ப நல்லூர்த் திருவிழாவில கூட்டத்தைக்கூட நினைச்சமாதிரி, விரதங்கள், விசேசங்கள், அன்னைபூபதி நினைவு தினம் எண்டதுகள் வரேக்கதான் உந்த வீட்டுக்கட்சிக்காரர் மத்திய குழுக் கூட்டத்தை வைக்கிறதை வாடிக்கையாக்கிப் போட்டினம். கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யிறவைக்கு உந்த விரதங்கள், விசேசங்கள், நினைவேந்தல்கள் முக்கியமில்லாமல் இருக்கலாம், ஆனால் மிச்சப் பேருக்கு அது முக்கியமெல்லோ. சிலவேளை இப்பிடியான நாள்களில கூட்டத்தை வைச்சாத்தான் தங்களுக்கு எதிர்க்கருத்துச் சொல்லுறவை கூட்டத்துக்கு வராமல் நிக்க, தாங்கள் நினைச்ச தீர்மானங்களை தங்களுக்குத் தாளம் போடுறவையை வைச்சு நிறைவேற்றலாம் எண்டு கூட்டத்துக்கு அழைக்கிறவை நினைக்கினமோ தெரியாது. உந்தக் கட்சியின்ர நிர்வாக விசயங்களைக் கையாளுறவைக்கு அறளைபேந்து போனதாலயோ என்னவோ கூட்டங்களுக்கு அழைப்புக்கடிதமும் ஒழுங்கா அனுப்புப்படுறேலையாம். மத்திய குழுவில இருக்கிற சிலருக்கு, மீடியாக்களில வந்த செய்தியைப் பாத்தபிறகுதான் மத்தியகுழுக்கூட்டம் நடக்கிற விசயமே தெரியுதாம். 'கட்சியின்ர யாப்பை மீறி பொதுச்சபை கூட்டினது பிழை' எண்டு வழக்குகள் போட்டு, கட்சி கந்தறுந்து போன பிறகும் கூட இவையள் யாப்புப்படி கூட்டத்துக்கு உரிய முறைப்படி அறிவிக்காமல் நடத்துகினம். உதுக்கும் ஆரும் வழக்குப் போட்டால் என்ன செய்வினம்?

இப்பிடி கட்சியின்ர திறப்பை தாங்களே வலிய எடுத்து, வேட்டியில சொருகி வைச்சிருக்கிறவை கூட்டம் வைக்கிற நாள் மற்றவைக்கு வசதிப்படுமோ இல்லையோ எண்டு நினைக்கிறதே இல்லை. இந்தமுறைகூட, வில்லங்கத்துக்கு கொழுவல் எடுக்கோணும் எண்டுதான் வாற ஞாயிற்றுக் கிழமை மத்தியகுழுக் கூட்டத்தை வைச்சிருக்கினமாம். அதைப்பற்றி நாளைக்குப் பாப்பம்.

- பட்சி

padsi@uthayan.com

# வறுமையை ஒழிக்க நவீன வேலைத்திட்டம்



## சஜித் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.30**

**24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு ஜனசவிய, கெமிதிரிய, சமுர்த்தி போன்ற திட்டங்களின் சிறந்த விடயங்களை உள்ளடக்கிய புதிய வறுமைஒழிப்புத்திட்டம்முன்னெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெண் தலைமைத்துவக் குடும்பங் கள் முழுமையாக வறுமைக்குள் சிக்கி இருப்பதனால் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுக் கும் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

சகலரையும் உள்ளடக்கிய புதிய வறுமை ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட இருக்கின்றது. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் 20,000 ரூபா வீதம் நிதி உதவி வழங்கி, அதன் மூலம் முதலீடு, நுகர்வு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகிய துறைகளுக்குள் பிரவேசிக்கச் செய்து, 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு ஆவன செய்வோம்

நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு, விவசாயத் துறையை மேம்படுத்தி வர்த்தக உடன்படிக்கை, விவசாய உற்பத்தி பொருள் சந்தை தொடர்பான தகவல்களோடு, விவசாயத்தில் ஈடுபடுவதற்கான பின்புலத்தை உருவாக்குவோம்- என்றார். (ச-இ)

NIPPON®
The Original
பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இல்லை,
ஒரிஜினல் A தரமுள்ள பொருட்களை பயன்படுத்தி செய்யப்பட்டது.
தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நேரடியாக தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.
No.1 Seller




1 YEAR
0.6L
1L
1.5L
1.8L
2.2L
2.8L
4300/- upwards
நாடுப்பூராகவும் உள்ள முன்னணி விநியோகஸ்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்...
லங்கா நிப்போன்
20, Keyzer Street, Colombo 11. 011 2437735 / 011 2437736
info@lankanippon.com | www. lankanippon.com
போலிகளில் அவதானமாயிருங்கள்..!

## யாழில் சுகாதாரச் சீர்கேடு; உணவகங்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.30


யாழ். நகரில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்கு யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யோ.ரவீந்திரன், யோ.சகிந்தன் தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் குழு யாழ்.நகரில் கடந்தவாரம் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இதன்போது சுகாதாரச் சீர்கேடு, காலாவதியான உணவுகளை விற்பனைக்கு வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் இரு உணவகங்களும் காலாவதியான மருந்துகளை வைத்திருந்த மருந்தகம் ஒன்றும் கண்டறியப்பட்ட நிலையில்

அவற்றுக்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஒரு உணவகத்துக்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் மற்றைய உணவகத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும் காலாவதியான மருந்துகளை வைத்திருந்த மருந்தகத்துக்கு 20 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-17)




இலங்கை வங்கியின் வரையறுக்கப்பட்ட சேவைகளுடனான புதிய யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - கிளிநொச்சிக் கிளை பல்கலைக்கழக வளாகத்தில் திறந்து வைக்கப்படும்.

வாடிக்கையாளர்களுக்கு விரைவாகவும் இலகுவாகவும் வங்கிச் சேவைகளை வழங்கும் வண்ணம் கிளிநொச்சிக் கிளையோடு இணைந்த இலங்கை வங்கியின் வரையறுக்கப்பட்ட சேவைகளுடனான புதிய யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - கிளிநொச்சிக் கிளை பல்கலைக்கழக வளாகத்தில் இன்று புதிய இடத்தில் திறந்து வைக்கப்படும்.

இணையற்ற வங்கிச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள எம்மிடம் வாருங்கள்!

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - கிளிநொச்சி வளாகம், கிளிநொச்சி.
தொலைபேசி: 021 228 5221 | மின்னஞ்சல்: boc093@boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## அம்புலன்ஸில் கடத்தியதாக பெண் மருத்துவர் முறையீடு

கொழும்பு, ஓக.30

அம்புலன்ஸ் வண்டியில் தன்னைக் கடத்திச்சென்ற நிலையில் அதிலிருந்து தான் தப்பியதாக சகோதர மொழி பேசும் ஆயுள்வேத பெண் மருத்துவர் ஒருவர் வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா - மன்னார் வீதியில் கடந்த திங்கட்கிழமை வவுனியா நோக்கி வந்த அம்புலன்ஸை மறித்து ஏறினேன். அம்புலன்ஸ் வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பிவிட்டு, மீண்டும் மன்னார் வீதி ஊடாக பம்பைமடு நோக்கிப் புறப்பட்டது.

இதனால் அவர்கள்என்னைக் கடத்திச் செல்வதாக அச்சமடைந்து அம்புலன்ஸிலிருந்து குதித்து காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளேன் என்று பெண் மருத்துவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்முறைப்பாட்டுக்கமைய அம்புலன்ஸ் வண்டிச் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

இதுதொடர்பில் மருத்துவமனை தரப்பால், குறித்த சாரதி தனது வீட்டுக்குச் செல்ல வாகனத்தை திருப்பிய போதே குறித்த மருத்துவர் அச்சம் காரணமாக குதித்தாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து சாரதி விடுவிக்கப்பட்டார். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

தாவடி, கொக்குவிலில் இயங்கிவரும் அரிசி ஆலை ஒன்றிற்கு அனுபவமுள்ள

**வெல்டிங் வேலையாட்கள் தேவை.**

நாளொன்றிற்கு 4000/- சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**076 096 9728**

(CS/56052) J-1

**பெயர்மாற்றம்**

அம்பாள்குளம் கிளிநொச்சியில் வதியும் கெலிஸ்ரஸ் ஜெஸ்மின் ஆகிய நான் எனது பெயரை கெலிஸ்ரஸ் தமிழி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் கெலிஸ்ரஸ் தமிழி என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**கெலிஸ்ரஸ் தமிழி**

(CR 28295) V-1

# ஜனாதிபதியின் குகையில் ராஜபக்சக்களின் திருடர்கள்

*பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 30

ராஜபக்சக்களுடன் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்றத் திருடர்கள் ரணில் பக்கம் சென்றுள்ள நிலையில், எமது தோழர் அநுர குமார ஜனாதிபதியாக வந்ததும் அவர்களின் அனைத்துச்சலுகைகளும்நிறுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பரப்புரை அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பரப்புரைகள் சூடு பிடித்துள்ள நிலையில் நாட்டைத்திருடியவர்கள் எந்தப் பக்கம் செல்வது என மாறி மாறி ஓடித் திரிகிறார்கள்.

இவர்களின் ஓட்டம் மக்களுக்கான ஓட்டம் அல்ல. தமது அரசியல் எதிர்காலத்தையும் தமது சுகபோக வாழ்க்கையையும் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்காக டீல் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டைக் கடன் சுமையில் சிக்க வைத்துவிட்டு அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக கருத்து வெளியிடும் ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லமுடியாது - என்றார். (ஒ-20)

**மாபிள் பதித்துத் தரப்படும்**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும். 1 சதுர அடி- 65 ரூபா. நிலம் இழுத்துப் பதிக்க- 90 ரூபா

தொடர்புகளுக்கு:

**077 334 1281**

# கேள்விஅறிவித்தல்
# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# சபைநிதி 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது. சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. **தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. தொலைபேசி:-024-3243542 தொலைநகல்: 0212290001** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 30.08.2024ம் திகதியிலிருந்து 11.09.2024 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 30.08.2024ம் திகதியிலிருந்து 11.09.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 12.09.2024ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது–30.Oct.2024) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.


| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/08/2024 | உடுப்புக்குளம் முறிப்பு இணைப்பு வீதி புனரமைப்பு (கணுக்கேணி) | 1.186 | 49 நாட்கள் | C9 and C8 (வீதி) | 24000.00 | 27/Nov/ 2024 |
| 2 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/14/2024 | கருநாட்டுக்கேணி எரிகொட்டகை அமைத்தல் (கரிகட்டுமூலை தெற்கு) | 1.296 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 26000.00 | 27/Nov/ 2024 |
| 3 | NP/14/44(1)/02/03/C.F/ Capital/02/ 2024 | புனையடி முருகன் கோயில் இணைப்பு வீதி புனரமைப்பு (கரிகட்டுமூலை வடக்கு) | 0.271 | 49 நாட்கள் | C9 and C8 (வீதி) | 25000.00 | 27/Nov/ 2024 |
| 4 | NP/14/44(1)/02/03/C.F/ Maintenance/03/2024 | கரைதுறைப்பற்று பிரதேச சபை தலைமை அலுவலக வர்ணம் பூச்சு மற்றும் அலுமினிய பொருத்தல் வேலைகள் | 1.483 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 29000.00 | 27/Nov/ 2024 |
| 5 | NP/14/44(1)/02/03/C.F/ Maintenance/04/2024 | முள்ளிவாய்க்கால் திண்மக்கழிவகற்றல் நிலையம் நெற் வேலி புனரமைப்பு | 1.313 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 26000.00 | 27/Nov/ 2024 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 09.09.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு.**
**30.08.2024**

(CR/43125) J-1

## பொதுவேட்பாளருக்கு ஆதரவு வவுனியாவில் துண்டுப்பிரசுரம்



வவுனியா, ஓக.30

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள ப. அரியநேந்திரனை ஆதரித்து வவுனியா நகரில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப் பட்டது.

தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், பொதுஅமைப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-110)

## கட்டட அனுமதியை ஆராய்ந்து வழங்குக

### மக்கள் கோரிக்கை


யாழ்ப்பாணம், ஓக.30

சாவகச்சேரி நகரசபையினர் வெள்ளம் வடிந்தோடக்கூடியவகையில் கட்டடத்தை அமைப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் வெள்ளம் வடிந்தோடக்கூடிய பகுதிகளை மறைத்து மதில்கள் கட்டப்படுகின்றன. இதனால் மழை பெய்யும் வேளையில் வெள்ளம் தமது வளவுக்குள் தேக்கமடையும் நிலை காணப்படுகிறது என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-45-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு




**அமரர் பழனிப்பிள்ளை சிவன்செயல்** (ராசா-கந்தரோடை)
(ராஜன் ஒலி, ஒளி, சமுத்திர மகால்,
**Europower Lanka (Pvt) Ltd** உரிமையாளர்)

தோற்றம்
01.12.1949

மறைவு
28.07.2024

எனது தந்தையாரின் நிகழ்வுக்கு அவரின் நண்பர்கள், தொழில்பழகியவர்கள், அறிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திகதி : 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : 11.00 - 3.00 மணிவரை**

**இடம் : சமுத்திர மகால் மருதனார் மடம்.**

**மகன்**
**077 652 9583**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.30

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தினத்தின் ஏற்பாட்டில் ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகளின் 'துறவு' எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரை ஆதீன வளாகத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம் பெறும். (ச-25,66)

# பொத்துவிலில் சஜித் பரப்புரை



ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாஸவை ஆதரித்து அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் மாபெரும் பரப்புரை கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் மாவட்டத்தின் அரசியல் பிரதிநிதிகள், கட்சிகளின் உயர் பீட உறுப்பினர்கள் உட்படப் பெருந்திரளான பொதுமக்களும் கலந்துகொண்டனர். (ச)

ஓம் விராட்
விஸ்வப்பிரமனே நமஹ

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.08.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் திரு வைத்திலிங்கம் விவேகானந்தன்

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (30.08.2024) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**01 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்**

(CS 1235) V-1

**குடும்பத்தினர்.**

# நெத்தமலுவாவில் காட்டுத்தீ

மொனராகல, ஓக.30

வெல்லவாயாவிலுள்ள நெத்தமலுவா மலைப்பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பரவிய காட்டுத்தீ நேற்று முன்தினம் புதன்கிழமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீயினால் 20 ஏக்கர் பிரதேசம் சேதமடைந்துள்ளதாகவும், கடும் வெப்பத்துடனான காலநிலை காரணமாகவே காட்டுத்தீ பரவியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,6)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 28 |
| 01 | 08 |
| 1990 | 2024 |



### சிறீஸ்கந்தராஜா ஷேயந்தன்

**(Structural Design Engineer and Technical Manager)
K.U.S Formwork & Scaffolding (pvt). Ltd**

வல்வெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தராஜா ஷேயந்தன் அவர்கள் **(28.08.2024)** புதன்கிழமை அன்று, இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா (புன்னாலைக்கட்டுவன்) மற்றும் செல்வராணி தம்பதிகளின் ஏக புதல்வனும், உதயமூர்த்தி (Teacher, J/ Udupiddy American Mission College) ஹேமாலினி தம்பதிகளின் அன்பு மருமகனும், கீர்த்தனா (Software Engineer Enactor Ltd) அவர்களின் அன்புக் கணவரும் உத்தராவின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

சண்முகதாசன் (ஓய்வு பெற்றமுகாமையாளர் - HNB) யோகேஸ்வரி, யுகேந்திரராசா, அமரர் தயாபரன், நந்தகுமாரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), யசோதரா, அமரர் முரளிதரன், அனுசாதேவி (Director - Oru Paanai Trust), காலஞ்சென்ற பஞ்சரட்ணம், அமிர்தராணி (Canada) ஆகியோரின் பெறாமகனும் அமரர் Dr. இந்திராணி, அமரர் சத்தியநாதன், லோகராணி, அமரர் பாலேந்திரன், விஜயராணி, அமரர் பத்மநாதன், யோகராணி, அமரர் வன்னியசேகரம், தர்மராணி. ஜெகநாகன், மகேந்திரன் (Engineer Botswana), கிருஜா (Accountant) ஆகியோரின் அன்பு மருமகனும் மற்றும் தர்சனா (Bio Science, University of Jaffna) கஜானன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **31.08.2024** சனிக் கிழமை அன்று மு.ப **9.00** மணி முதல் பி.ப **4.00** மணி வரை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக் கிழமை **01.09.2024** மு.ப **11.00** மணியளவில் இறுதிக்கிரியைகள் மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பி.ப **2.00** மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**தொடர்புக்கு
0776341356**

**தகவல்- குடும்பத்தினர்**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் 09.09.2024 31.12.2024

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளை 2024 ஆம் 09.09.2024 - 31.12.2024 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 30.08.2024 05.09.2024 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 05.09.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி வரை**
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 05.09.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்**

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 05.09.2024 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீள்கேள்வி அறிவித்தல் 09.09.2024 - 31.12.2024

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம் - புதிய கட்டடம்** | | | |
| 1 | வளலாய் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 81,000.00 |
| 2 | வளலாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 45,000.00 |
| **புத்தூர் உப அலுவலகம் - (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டடம்)** | | | | |
| 1 | புத்தூர் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 80,500.00 |
| 2 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 18,000.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.08.02 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும். மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
021-2058986**

(R/43118) J-1

**2024.08.30**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாம் ஆண்டு நினைவதனில்



தோற்றம்
06.12.2000



மறைவு
30.08.2012

செல்வி
**துஷாந்தி ஸ்ரீசோமாஸ்கந்தன்**
(மாணவி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தரம்-7F)

அன்பான எம் செல்ல மகளே
அகிலத்தில் உமைப்போல ஆருளரோ-
இப்பாரினிலே
பன்னிரண்டாண்டுகள் ஆனாலும்
ஆறிடுமோ எம் துயரம்
அன்பான ஆசை முகம் மறக்காலாமோ
பொட்டு வைத்த வண்ண நிலவொன்று
எம்மையெல்லாம் விட்டுச் சென்றதேனோ!
சிட்டுகுருவியாய் சிறகடித்த சிலையொன்று
எம் நெஞ்சையெல்லாம் சிறைப்படுத்தி சென்றதேனோ!
அள்ளி அள்ளி அன்பாய் வளர்த்த பூவொன்று
வாடி நிலத்தில் விழுந்ததேனோ!
எண்ணி எண்ணி தவிக்கின்றோம்
இதயம் தான் கலங்குதம்மா
மண்ணில் வாழும் வரை மறவோமே.

செ.சிறிசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
சிறி சோமாஸ் அரைக்கும் ஆலை
300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

என்றென்றும் உம் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்.

## திருமலை...

மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை அலுவலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடையே கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது தொடர்பில் நீண்ட விவாதம் இடம்பெற்றிருந்தது. கலந்துரையாடலின் இறுதியில் ஒருமித்த முடிவாக தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுத்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை முடிவை அறிவிக்காதுள்ளது. இந்த நிலையில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தரப்பினர் பொதுவேட்பாளருக்கு எதிராக கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். அதற்கு மாறாக, கட்சியின் முக்கியஸ்தர்களான மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்ட தரப்பினர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வெளிப்படையாகவே ஆதரவைத் தெரிவித்து வரும் நிலையில், திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பது என ஏகமனதாகத் தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

(அ-ஒ-100)

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18.08.1934



இறப்பு
01.09.2013

**அமரர் கைலாயபிள்ளை சிவலிங்கம்**
திதி: துவாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பதினோராண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

என்றும் நினைவுகளுடன்
பிள்ளைகள்.

(CS/56039) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
30.07.1956



மறைவு
29.08.2024

**புளோரன்ஸ் விமலா**

கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் 1ஆம் ஒழுங்கை கோவில் வீதி, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புளோரன்ஸ் விமலா (29.08.2024) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மரியாம்பிள்ளை செல்லத்துரை-டில்லி யோசேப்பின் மகளும், சூசைப்பிள்ளை-ஆரோக்கியம் இராசம்மா ஆகியோரின் மருமகளும், அருளானந்தம் டொமினிக் (முன்னாள் சிற்றி மெடிக்கல் பங்காளர்) அவர்களின் அன்பு மனைவியும், கிறிஸ்ரிகுமார் டொமினிக் (நியூ சிற்றி றேடஸ்) அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கமலதாசன், அமலா செல்வதாசன் (கனடா), ஜோசப் யேசுதாசன் (அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வைலற், வீடா மரியதாசன், சிறிஸ் பெனடிக்ற் (லைடன் உரிமையாளர்), சிசிலியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 1ம் ஒழுங்கை, கோவில் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (31.08.2024) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 704 3823

# மரண அறிவித்தல்

மலர்வு
16.05.1979



உதிர்வு
28.08.2024

**இராசையா தர்மசேனன்**
(கண்டி சில்வஸ்டர் மாணவன்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கண்டி மற்றும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தர்மசேனன் நேற்று முன்தினம் (28.08.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், அனோஜாவின் அன்புக் கணவரும், அகளியன், அகிலன், அக்சயன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், லோகீசன், காலஞ்சென்ற ஜெகதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி வடக்கு.

தகவல்:
தகப்பன் - சி.செ.இராசையா
சகோதரன் - இ.லோகீசன்
WhatsApp No:074 1122 823
தொலைபேசி : 074 1469 176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
### சுவிற்சர்லாந்து
### தமிழ்க்கலைத் தேர்வு
### தேர்வு நடுவர்கள் தேவை

IITA

(நடனம் - பரதம், இசை (வாய்ப்பாட்டு, வயலின், வீணை), மிருதங்கம்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தால் ஐரோப்பிய நாடுகளில் (சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், இத்தாலி) நடாத்தப்பட்டு வரும் தமிழ்க்கலைத் தேர்விற்கு செய்முறைத் தேர்வு நடுவர்களாக கடமையாற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை 10.09.2024 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அல்லது மின்னஞ்சலிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கல்வித் தகைமைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் துறைசார் பட்டப்படிப்பினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
2. துறைசார் கற்பித்தலில் இருபது (20) வருடத்திற்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

International Institute of Tamil Arts
Gewerbestrasse 4
8162 Steinmaur
Switzerland.

**மின்னஞ்சல்:** iita@hotmail.ch

**நாகராஜா விஜயகுமார் (சங்கர்)**
**தேர்வுப்பொறுப்பாளர்**
**அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் -சுவிற்சர்லாந்து**
**0041 77 922 03 14**

(CS/56053) J-1

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 24 . 02 . 1938



**மறைவு** 27 . 08 . 2024

### கலாபூஷணம் முடியப்பு சிங்கராயர்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

பாஷையூரைப் பிறப்பிடமாகவும், 35/6 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முடியப்பு சிங்கராயர் அவர்கள் கடந்த (27.08.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முடியப்பு - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வின்சன் - சிசிலியா தம்பதியரின் மருமகனும், மேரி விக்ரோறியா சிங்கராயர் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அந்தோனியம்மா, மரியசலோமை, அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளினி றதீஸ்குமார் (ஆசிரியர் ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), திலீபா ஜோண்சன் (பாமா - கனடா), வசீகரன் (MLT போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), காந்திமதி சாம் கிளறன் (மதி - UK), பிரேமரஜனி றெஜினோல்ட் குரூஸ் (பிரதேச செயலகம் - மன்னார் நகரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றதீஸ்குமார், ஜோண்சன் (கனடா), கிருபா மேரி வசீகரன் (ஆசிரியர் திருக்குடும்ப கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்) சாம்கிளறன் (UK), றெஜினோல்ட் குரூஸ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம் - மன்னார்) ஆகியோரின் மாமனாரும், ஜொய்சன் (கனடா), ஆன்ஷெரன், ஜீவிதன், சுருதிக்கா, ஆன்ஷிரோனி, றொஷாலி, கற்றீனா, ரியானா, வளனிஷா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (30.08.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
வசி - 077 645 0311
தயா - 077 592 8404
நந்தினி - 077 432 5005

**35/6 விதானையார் வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(CS/56050) J-1

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கும் கொக்க - கோலா விநியோக நிறுவனத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பணிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**பணிநிலை விற்பனைப்பிரதிநிதி (DSR)**

1. **கல்வித்தகைமை** - க.பொ.த உயர்தரம் சித்தி
2. **வயதெல்லை** - 25 - 35

**குறிப்பு**

- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல்.
- கிளிநொச்சி பகுதியில் வசிப்பவராக இருத்தல்
- முன்னனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நேர்முகத்தேர்வு

**திகதி:** 02.09.2024 திங்கள் காலை 9.00 மணி
**இடம்:** கே.எம்.ரி டிஸ்ற்றிபியூட்டர் இல: 21, கனகபுரம் கிளிநொச்சி.

## பெயர் மாற்றம்

காந்திஜீ வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவில் இல் வசிக்கும் **இரத்தினம் பவளம்மா** ஆகிய நான் எனது பெயரை **சுப்பிரமணியம் பவளமலர்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சுப்பிரமணியம் பவளமலர்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/56051) J-1 **சுப்பிரமணியம் பவளமலர்**

## காற்றுமாசு

புதுடில்லி, ஓக. 30


இந்தியாவில் காற்று மாசு அதிகரித்து வருகின்றது என்றும், இதேநிலை தொடர்ந்தால் இந்தியர்கள் தங்களில் ஆயுட்காலத்தில் 3.4 வருடங்களை இழப்பார்கள் எனறும் ஆய்வொன்றில் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நிலநடுக்கம்

ஆப்கானிஸ்தானில் நேற்றுச் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. தலைநகர் காபுலில் இருந்து 350 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.7 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 25 . 07 . 1922



**மறைவு** 29 . 08 . 2024

### அமரர் சுப்பிரமணியம் சோதிலிங்கம்

**(ஓய்வு-பிரதம இலிகிதர் பிராந்திய சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்)**

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோதிலிங்கம் அவர்கள் நேற்று (29.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல சட்டத்தரணியும் சமாதான நீதவானுமாகிய சுப்பிரமணியம்-யோகாம்பிகை தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தையல்நாயகி தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தெய்வமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான யோகமலர், யோகமணி, இரஞ்சிதநாதன் சந்திரசேகரா, யோகதேவி (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, நவமணி, செல்வானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (30.08.2024) நாவலர் பாடசாலை வீதியில் (வச்சாவளை வீதி) உள்ள அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவலர் பாடசாலை ஒழுங்கை**
**கோப்பாய் தெற்கு**
**கோப்பாய்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 020 7528**

(Cs 56056) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளப்...

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

"பௌத்த மதத்துக்கு முதன்மை இடமளித்து, புத்த சாசனத்தை வளர்த்துப் பாதுகாக்கும் அதேவேளையில், பிற மதங்களைப் பின்பற்றுபவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் விரும்பும் மதத்தைக் கடைபிடிக்கவும் வழிபடவும் உள்ள அடிப்படை உரிமையை உறுதி செய்யவும் நாங்கள் செயற்படுவோம்.

'ஜனசவிய', 'சமுர்த்தி', 'அஸ்வெசும', 'கெமிதிரிய' ஆகிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தி, விரிவான புதிய திட்டத்தை உருவாக்கி, வறுமையை வரலாற்றின் ஒரு பகுதியாக மாற்றுவோம். புதிய திட்டத்தின் மூலம் மாதாந்தம் பயனாளி குடும்பங்களுக்கு ரூ.20 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும். புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும் வரை, 'அஸ்வெசும' பலன்கள் தொடர்ந்து வழங்கப்படும்

மதத் தலைவர்கள், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து முறையாக கருத்துகளைப் பெற்று, தற்போதைய அரசமைப்பை மாற்றி புதிய அரசமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும், அர்ப்பணிப்புடன் உள்ளன. இந்த செயல்முறையில், எமது கொள்கை என்னவென்றால், தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய நாடாளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசமைப்பு மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பதுடன். மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாணசபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

பாதுகாப்புத் தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். அரசு ஆதரவுடன் மக்கள் தொகை மாற்றங்கள் செய்யப்படாத கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தற்போது நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஊழல்வாதிகள் எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலுக்கும் வேட்புமனு வழங்கப்படமாட்டாது. மற்றும் அரசாங்கப் பதவி எதுவும் வழங்கப்படமாட்டாது.

சலுகைகள் மற்றும் அனுசரணைகளின் காரணமாக உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுக்க சட்ட திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நீதிமன்ற நடவடிக்கைகளை 2 மாதங்களுக்குள் முடிக்கக் கட்டாயப்படுத்தும் ஏற்பாடுகளை முன்வைத்தல்.

முப்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் தொழில் பாதுகாக்கப்படும். அவர்களுக்குக் கூடுதலான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.

ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணமான குற்றவாளிகளுக்கு மூவரடங்கிய நிரந்தர மேல் நீதிமன்றத்தால் நாளாந்தம் வழக்கை விசாரணை செய்து தண்டனை வழங்குவது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகக் கருதப்படுகிறது. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்து செய்து, நாட்டின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய சிறந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நிறுவுதல்.

அரசியல் காரணங்களுக்காக மீளப்பெறப்பட்ட குற்றவியல் வழக்குகள் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 மாதங்களுக்குள் மீளவும் அந்த வழக்குகள் தொடுக்கப்படும். நீதிமன்றத்தால் பொறுப்புக்கூற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அநியாயமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான உதவிகளை வழங்குவோம்" என்ன உள்ளிட்ட விடயங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ-ம-ஒ-44)

## இறக்குமதியா?...

இந்த நாட்டில் உற்பத்தி செய்து நாட்டை வளமுடையதாக்கவேண்டும் என்றால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைத்துக்கொள்ளுங்கள் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். கந்தளாயில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"செப்ரெம்பர் 21ஆம் திகதிக்கு பின்னர், எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத ஏனைய கட்சியை சேர்ந்தவர்களை எந்தவிதத்திலும் நோகடிக்கவேண்டாம். அந்த அரசியல் கலாசாரம்தான் எமக்குத் தேவை. நாங்கள் பிரிந்து சண்டை போட்டுக்கொள்ளவேண்டுமா? ஊர் பிளவுபட்டால் கூத்தாடிக்குத்தான் கொண்டாட்டம் என்பார்கள். அவர்கள் தேர்தலுக்குப் பின் ஏனைய தரப்பினரைத் தாக்கினார்கள், கொடுமைப்படுத்தினார்கள். இறுதியில் மஹிந்தவும் ரணிலும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு இடையில் கோபதாபங்கள் இருக்கவில்லை. மஹிந்தராஜபக்ச, சஜித்பிரேமதாஸவின் தங்கையை முன்னாள் ஜனாதிபதியின் மகள் என்பதற்காக பண மோசடியிலிருந்து விடுவித்தார். ரணில் விக்கிரமசிங்க, ஷிராந்தி ராஜபக்ச 350 இலட்சம் ரூபா கொடுத்து டொரிங்டனில் ஒரு வீடு வாங்கினார். அந்தப் பணம் எங்கே இருந்து வந்தது என்ற விசாரணை மேற்கொள்ளப்பட்ட வேளையில் அவரிடமிருந்து வாக்குமூலம் பெறக்கூடாது எனத் தீர்மானித்தார். அவர்கள் அப்படித்தான். திருடியிருந்தால், மோசடி செய்திருந்தால் செப்ரெம்பர் 22ஆம் திகதிக்குப் பின்னர் கட்டாயமாக அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவோம். அது ஒரு பழிவாங்கல் அல்ல. தற்போது மருந்து கிடையாது, பிள்ளைக்கு உணவு கிடையாது, கல்வி கற்பதற்கான வசதி கிடையாது. அதற்கான காரணம் என்ன? பொதுப்பணத்தை இவர்கள் கோடிக்கணக்கில் கபளீகரம் செய்துவிட்டார்கள். எனவே, அது தண்டிக்கப்படவேண்டிய குற்றமல்லவா?

உங்களுடைய ஊரில் இருந்த கைத்தறி நெசவாலைகள் எங்கே? அதற்குப் பதிலாக வாங்கி விற்கும் பொருளாதாரமொன்றை உருவாக்கியுள்ளார்கள். இந்தியா உற்பத்தி செய்கிறது. நாங்கள் விலைக்கு வாங்குகிறோம். இந்தியா முட்டை உற்பத்தி செய்கிறது. நாங்கள் முட்டையை வாங்கிப் பொரிக்கிறோம். இந்தியா உற்பத்திக்கு உயிர் கொடுத்ததால்தான் முன்னேற்றம் அடைந்தது.

எமது நாட்டில் உற்பத்தி சீரழிக்கப்பட்டது. ஏனென்றால், இறக்குமதி செய்தால் சட்டைப் பைகள் நிறைகின்றன. சீனி வரி மோசடி ஞாபகமிருக்கிறதா? ஆயிரத்து 500 கோடி ரூபா வரி மோசடி. ஒரு கப்பல் நிறைய பசளை கொண்டுவந்தார்கள் ஞாபகம் இருக்கிறதா? அதில் ஒரு மூடையைக் கூடத் தரையிறக்கவில்லை. 60 இலட்சம் டொலரை செலுத்தினார்கள். அதாவது, ஆயிரத்து 800 மில்லின் ரூபா. இந்தியாவில் இருந்து நனோ உரத்தை கொண்டுவந்தார்கள். அதனை வயலுக்குப் போட்டால் குண்டு வெடிப்பதைப் போல விளைச்சல் கிடைப்பதாகக் கூறினார்கள். இப்பொழுது மறுக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பொருளாதாரத்தை சீராக்கவேண்டுமென்ற உண்மையாகத் தேவை இருக்கவில்லை. நாடு வறுமைபட்டது. ஆனால், ஆட்சியாளர்கள் தனவந்தர் ஆகினார்கள். மஹிந்த வறியவரா? ரணில் வறியவரா? நாட்டின் உற்பத்தி அதிகரித்தால் அவர்களுக்கு கொமிஷன் கிடைக்காது. ஆகவே, இந்தப் பொருளாதாரப் பயணத்தை முழுமையாக திசைத்திருப்புகின்ற தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை நாங்கள் அமைப்போம்" - என்றார்.

(அ-ஒ-இ)

## மாகாணசபை...

மிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின், 'ரணிலுடன் நாட்டை வெற்றிகொள்ளும் ஐந்தாண்டுகள்' எனும் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது. காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பில் நவாஸ் ஆணைக்குழு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், புதிய தொழில்வாய்ப்பு உருவாக்கம், உயர் சம்பளம், வரிச் சுமைக் குறைப்பு, பொருளாதாரத்திற்கான திட்டம், 'உறுமய' மற்றும் 'அஸ்வெசும' வேலைத் திட்டங்களை விரிவுபடுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதிகாரப்பகிர்வு தொடர்பிலும் உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் 2024 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய, மாகாணசபைகளுக்கு அதிகாரம் பகிரப்படும். அத்துடன், மாகாண சபைகளுக்கு உரித்தான அதே போல மத்திய அரசால் கையகப்படுத்தப் பட்டுள்ள, முதலாம் அட்டவணையில் உள்ள அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு மீண்டும் வழங்கப்படும். மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு புதிய நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும்.

கட்சித் தலைவர்கள் அனுமதித்துள்ள, உப அட்டவணை 3இல் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாணசபைகளிடம் ஒப்படைக்கப்படும். தேசிய கொள்கைத் திட்டத்துக்கு அமைய, தமது மாகாணத்துக்குள் பாடசாலைக் கல்வி, தொழில் பயிற்சி, பட்டமளிப்பு நிறுவனம், மாகாண சுற்றுலா அபிவிருத்தி, விவசாய நவீனமயமாக்கல் போன்ற பணிகளை முன்னெடுக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்படும். இதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். மாவட்ட அபிவிருத்திச் சபை நிறுவப்படும். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னர், ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்பை இயற்றும் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு வழங்கப்படும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரமும் புதிய நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும்.

போர்க் காலத்தில் இழக்கப்பட்ட காணியென்பது உணர்வுபூர்வமான பிரச்சினையாகும். இதற்கு நிலையானதொரு தீர்வைக்காணும் நோக்கில் தேசிய காணி ஆணைக்குழுவொன்று நிறுவப்படும். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுச் சட்டமூலம் அமுல்படுத்தப்படும். காணாமற்போனவர்கள் தொடர்பில் நவாஸ் ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சுயதொழிலில் ஈடுபடுவதற்கு நிதி நிவாரணம் வழங்கப்படும் - என்றுள்ளது.

(அ-ம-44)

## யாழில்...

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்களம் சூடு பிடித்துள்ள நிலையில் மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் யாழ். மாவட்டத்துக்கு தமது பரப்புரை களுக்காக வருகை தரவுள்ளனர். இன்று இரவு யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சஜித் பிரேமதாஸ, நாளை காலை சர்வமத் தலைவர்களைச் சந்திப்பதுடன் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கும் செல்லவுள்ளார். அதன் பின்னர் நாகவிகாரைக்கும் சென்று வழிபடவுள்ளார். அன்றையதினம் ரில்கோ விருந்தினர் விடுதியில் பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகத்துறையினர், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல தரப்புகளையும் சந்திக்கவுள்ளார். அன்றையதினம் மாலை 4 மணிக்கு றக்கா வீதியில் நரிக்குண்டுக் குளத்துக்கு அண்மையில் உள்ள மைதானத்தில் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்பார். முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகின்றார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, வீரசிங்கம் மண்டபத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடுப்பிட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நடக்கும் பரப்புரைக் கூட்டத்திலும் அன்றைய தினம் சங்கிலியன் பூங்காவில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நடக்கும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்து முற்றவெளி மைதானத்தில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார். இந்தப் பரப்புரைக் கூட்டத்துக்காக ஒழுங்குகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருமதி விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கவனிக்கின்றனர்.

(அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று வியாழக்கிழமை கொடிகாமம் மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. கருத்தரங்கில் சமுர்த்தி முகாமை யாளர்கள்,போதை ஒழிப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத் தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி- 9)

# யாழில் உள்ள தீவுகளில் கலப்பு மின் திட்டங்கள்

## முதற்கட்ட கொடுப்பனவு நேற்று வழங்கல்

கொழும்பு, ஓக. 30

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலை தீவு ஆகிய தீவுகளில் கலப்பு மின்சக்தி திட்டங்களை நிறுவு வதற்கான முதற்கட்ட கொடுப்பனவு இந்தியாவால் இலங் கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்சன ஜயவர்த்தன மற்றும் இலங்கையின் நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் தலைவர் ரஞ்சித் சேபால ஆகியோரிடம் நேற்றுமுன்தினம் இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுக ளின் கலப்பு மின்சக்தி திட்டங்களுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையானது, இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைச்சாத்திடப்பட்டதுடன், அதன் தொடர்ச்சியாக இந்தத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தம் இந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி கைச் சாத்திடப்பட்டது.

2025ஆம் ஆண்டு மார்ச் முற்பகுதியில் இந்தத் திட்டங்களை நிறைவுசெய்து 2025ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் அவற் றைக் கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் நிலையில் இந்த மூன்று தீவுகளிலும் முதற்கட்டப் பணிகள் ஆரம்பமா கியுள்ளன.

இந்திய அரசாங்கத்தின் 11 மில்லியன் டொலர் நிதியுதவியின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (அ-ம)

# மக்களை மூச்சுவிட வைத்தவர் ரணில்

## அங்கஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

நாடு பொருளாதார ரீதியில் சிக்கித் தவித்தபோது மக்கள் மூச்சுவிடமுடியாத நிலையில் காணப்பட்ட மக்களை மூச்சுவிட வைத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங் கவே.

–இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கி றேன். தமிழ் மக்களுக்கு தீர்க்கப்படாத பிரச்சி னையாக அரசியல் பொருளாதாரப் பிரச் சினைகள் இருக்கின்ற நிலையில் அதனைத் தீர்க்கும் தலைவர் ஒருவரை ஜனாதிபதியாக்கு வதே தமிழ் மக்கள் பேரம் பேசுவதற்கு சாதக மாக அமையும்– என்றார். (ச–27)


**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு கொத்து, றைஸ் மற்றும் றொட்டி போட தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 2030 625**




**31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்**



தோற்றம் 20 . 09 . 1964

மறைவு 31 . 07 . 2024

கடந்த 31.07.2024 அன்று அமரத்துவம் அடைந்த

**அமரர் மார்க்கண்டு சிறிகாந்தன்**

(பிரதி அதிபர் யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.08.2024 அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.08.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள தால், அனைத்து அன்புள்ளங்களையும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யார்வத்தை லேன்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 062 9107

(CS 1237) A-1

**31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



தோற்றம் 24 . 12 . 1991

மறைவு 01 . 08 . 2024

கடந்த 01.08.2024 அன்று இறைபதம் அடைந்த
எமது அன்புச் செல்வம்

**அமரர் யோகலிங்கம் அருள்காந்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் (31.08.2024) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப் பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள், வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினர், புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகத்தினர் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

"அம்பிகைவாசா"
பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

(CR/43115) J-1

குடும்பத்தினர்
தொ.பே.இல : 021 226 2317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.